வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 19.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் இன்று முடிவடைந்து, இரு அவைகளும், மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப் பட்டன.

அரசுப் பணிகளுக்கு ஆள் எடுப்பதில், நேர்மை-நியாயத்திற்கு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று மாலை புதுடெல்லியில், பாரம்பரிய மருத்துவம் குறித்த, 2-ஆவது உலக உச்சி மாநாட்டின் நிறைவு விழாவில் கலந்து கொண்டார்.

புதுச்சேரியில், எழுத்தாளர் புத்தகச் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 29ஆம் ஆண்டு புத்தகக் கண்காட்சியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

---------------------------

*நாடாளுமன்றம் 1 (3)*

இம்மாதம் 1ஆம் தேதி தொடங்கிய நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் இன்று முடிவடைந்து, இரு அவைகளும், மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப் பட்டன. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

(வாய்ஸ்)

மக்களவையில், அவையை ஒத்தி வைக்கும் முன்பாக, சபாநாயகர் திரு. ஓம். பிர்லா பேசுகையில், 19 நாள் கூட்டத் தொடரில், மக்களவை 15 அமர்வுகளை நடத்தியதாகவும், இம்முறை அவையின் செயல்திறன், 111 சதவிகிதமாக பதிவாகி இருப்பதாகவும் கூறினார்.

மாநிலங்களவையில், அவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நிறைவுரையாற்றுகையில், அவை 92 மணி நேரம் செயல்பட்டு, 121 சதவிகித செயல்திறன் காட்டி இருப்பதாக தெரிவித்தார். வரலாற்று முக்கியத்துவம், மற்றம், ஜனநாயக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில், உயர்தர விவாதங்கள் அவையில் இடம்பெற்றதாகவும், 59 தனி நபர் மசோதாக்கள் கொண்டு வரப்பட்டதாகவும், அவர் கூறினார். வந்தே மாதரம் தேச பக்தி பாடலின் 150 ஆண்டுகள் பற்றிய விவாதங்களில், 82 உறுப்பினர்களும், தேர்தல் சீர்திருத்தம் பற்றிய விவாதங்களில், 57 உறுப்பினர்களும் கலந்து கொண்டு, மதிப்புமிக்க கருத்துக்களை வெளியிட்டதாக அவர் தெரிவித்தார்.

ஆயினும், நேற்றைய அமர்வில் எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளி ஏற்படுத்தியது குறித்து, மாநிலங்களவைத் தலைவர் கவலை வெளியிட்டார். உறுப்பினர்கள் இதுகுறித்து, தாங்களே எண்ணிப் பார்த்து, எதிர்காலத்தில் இவ்வாறு நடந்து கொள்வதை தவிர்க்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

*நாடாளுமன்றம் 3 (7)*

இன்று முடிவடைந்த நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில், விக்சித் பாரத்-ஜி ராம் ஜி வேலை உறுதியளிப்பு மசோதா, அணுசக்தி மேம்பாட்டிற்கான ஷாந்தி மசோதா, 71 பழைய சட்டங்களை ரத்து செய்வதற்கான மசோதா உட்பட முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டன. மொத்தம் 1 லட்சத்து 32 ஆயிரம் கோடி ரூபாய்க்கான, முதல் தொகுப்பு துணை மானியக் கோரிக்கைகளுக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---------------------------

*ரிஜிஜூ* (15)

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள், இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்தி, மக்களின் வாழ்வை வளமாக்குவதில், முக்கிய பங்காற்றும் என்று, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நடாளுமன்றத்தில், தேர்தல் சீர்திருத்தம் குறித்து தனி விவாதம் நடைபெற்றது, இதுவே முதல்முறை என்றார். பலர், பல கேள்விகளை கேட்ட போதிலும், இரு அவைகளிலும் நடைபெற்ற விவாதங்களுக்கு பின்னர், எல்லா பிரச்சனைகளும் தெளிவாகி விட்டதாக, அவர் குறிப்பிட்டார். தேர்தல் ஆணையத்தையும், தேர்தல் நடைமுறைகளையும், குறை கூறியவர்களின் குட்டு, வெளிப்பட்டு விட்டதாக, அவர் மேலும் கூறினார். கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பதில் அளிக்கையில், மக்களவையில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர் கட்சிகள் ஏற்படுத்திய அமளி

காரணமாகவே, டெல்லி தலைநகரப் பிரதேசத்தின் காற்று மாசுபாடு குறித்து விவாதிக்க இயலவில்லை என்றார்.

----------------------------

*ஓம் பிர்லா சந்திப்பு* (15)

இன்று நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டதை தொடர்ந்து, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள தமது அறையில், பல்வேறு அரசியல் கட்சிகளின் எம்.பிக்களை சந்தித்தார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அர்ஜுன்ராம் மேக்வால், திரு. ராம்மோகன் நாயுடு, மூத்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே, சமாஜ்வாதி எம்.பி, திரு. தர்மேந்திர யாதவ் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

முன்னதாக, திரு. ஓம் பிர்லா செய்தியாளர்களிடம் பேசுகையில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு எதிராக, எதிர்கட்சிகள் கொடுத்துள்ள பதவி நீக்கத் தீர்மானத்தை, சட்டவிதிகள், மற்றும், நடைமுறைகளின் படி, தாம் ஆராய்ந்து வருவதாக தெரிவித்தார். நாடாளுமன்ற வளாகத்திற்குள், சில எம்.பிக்கள், இ-சிகரெட் புகைத்தது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும், எல்லா அம்சங்களையும் விசாரித்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

----------------------------

முர்மு (19)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று ஹைதராபாத்தில், மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் தலைவர்களுக்கு இடையிலான தேசிய மாநாட்டை தொடக்கி வைத்தார். அரசுப் பணிகளுக்கு ஆள் எடுப்பதில், நேர்மை-நியாயத்திற்கு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், வேலை தேடும் முயற்சிகள், மற்றும், பலன்களில், இளைஞர்களுக்கு சம வாய்ப்பு இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இந்தியாவின் அரசியல் சாசனத்தில், அரசுப் பணிகள், மற்றும், பணியாளர் தேர்வாணையங்களுக்கு, பிரத்யேகமான தனிப் பகுதி இருப்பதை குடியரசுத் தலைவர் சுட்டிக் காட்டினார். மத்திய-மாநில நிலைகளில், மக்களுக்கான கொள்கைகளை முறையாக நிறைவேற்ற, திறமையான, நேர்மையான, சேவை உணர்வுடன் கூடிய, அரசு ஊழியர்கள் அவசியம் என்பதே இதற்கு காரணம் என்று அவர் கூறினார். 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த, எல்லா நிலைகளிலும், திறம்பட்ட நிர்வாக முறைகள் அவசியம் என்றும், எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற அரசு ஊழியர்களை தேர்ந்தெடுத்து வழிநடத்துவதில், தேர்வாணையங்களின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த 2 நாள் மாநாட்டின் தொடக்க விழாவில், தெலங்கானா ஆளுநர் திரு. ஜிஷ்ணு தேவ் வர்மா, யூபிஎஸ்சி தலைவர் திரு. அஜய்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---------------------------

பாரம்பரிய மருத்துவத் துறையை மேலும் ஊக்குவிக்க, ஆராய்ச்சிப் பணிகளை வலுப்படுத்தி, டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரிக்கவும், நம்பகமான ஒழுங்குமுறை கட்டமைப்பு ஒன்றை கொண்டு வரவும் தேவை இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். அவர் இன்று மாலை புதுடெல்லியில், பாரம்பரிய மருத்துவம் குறித்த, 2-ஆவது உலக உச்சி மாநாட்டின் நிறைவு விழாவில் கலந்து கொண்டார். யோகாவை பிரபலப்படுத்துவதில் சிறப்பாக பங்களித்து பிரதமரின் விருதுக்கு தேர்தெடுக்கப் பட்டவர்களுக்கு, விருதுகைள அவர் வழங்கினார். அஸ்வகந்தா ஆயுர்வேத மருந்து குறித்த நினைவு தபால் தலை ஒன்றை அவர் வெளியிட்டார். ஆயுஷ் மருத்துவமுறைகள் பற்றிய அரசின் பல்வேறு முன் முயற்சி திட்டங்களை விழாவின் போது அவர் தொடக்கி வைத்தார். ஆயுஷ் மருந்துகள் மற்றும் சேவைகளின் தரத்தை உலக அளவில் உறுதிப்படுத்துவதற்கான, ஆயுஷ் மார்க் முத்திரை,மற்றும், யோகா பயிற்சி பற்றிய உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையை, அவர் வெளியிட்டார்.

சுகாதார நல வாழ்வு குறித்த அறிவியல் மற்றும் நடைமுறைகள் மூலம் சமநிலையை மீட்டெடுத்தல் என்ற கருப்பொருள் அடிப்படையில், மத்திய ஆயுஷ் துறை அமைச்சகம், உலக சுகாதார அமைப்புடன் இணைந்து, இந்த 3 நாள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்து இருந்தது.

--------------------------

*மோடி பயணம் 1* (3)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை மேற்கு வங்கத்திற்கும், நாளை முதல் 2 நாட்களுக்கு அசாமிற்கும், பயணம் மேற்கொள்கிறார். பிரதமரின் பயணம் குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

*மோடி பயணம்* 2 (14)

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை, மேற்கு வங்க மாநிலம் நதியா மாவட்டத்தில், மொத்தம் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான 2 தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை தொடக்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும் உரையாற்றுகிறார். இத்திட்டங்களால், கொல்கத்தா-சிலிகுரி இடையிலான பயணம், 2 மணி நேரம் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

தொடர்ந்து, பிரதமர் நாளை குவஹாத்தியில், லோகப்பரிய கோபிநாத் பர்தோலாய் சர்வதேச விமான நிலையத்தின், புதிய, முனையக் கட்டிடத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி திறந்து வைக்கிறார். நாளை மறுநாள் குவஹாத்தியின் போராகாம் பகுதியில் உள்ள, தியாகிகள் நினைவு வளாகத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க, அசாம் இயக்கத்தின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு, அவர் மலரஞ்சலி செலுத்துகிறார். தொடர்ந்து, அசாம் பள்ளத்தாக்கு உர உற்பத்தி நிறுவனம் சார்பில், அமோனியா-யூரியா உற்பத்தி ஆலை அமைக்கும் பணிகளை, பிரதமர் பூமி பூஜை செய்து தொடக்கி வைப்பார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

கோவா (20)

கோவா விடுதலை நாள், இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர், அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மாறாத மன உறுதியுடன் போராடி விடுதலை பெற்றுத் தந்த சுதந்திரப் போராட்ட வீரர்களைப் போற்றியுள்ளார். இவர்களையும், இவர்களின் துணிச்சலையும், நாடு நன்றியுடன் நினைவு கூர்வதாக, அவர் கூறியுள்ளார். அநீதியை ஏற்க மறுத்து, மனஉறுதி, மற்றும், துணிச்சலுடன் விடுதலைக்கு போராடியவர்களின் அபாரமான மனோதிடத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி நினைவு கூர்ந்துள்ளார். எல்லா விதங்களிலும் முன்னேறிய கோவா ஒன்றை உருவாக்குவதில், இவர்களின் தியாகத்தில் இருந்தே, அரசும், மக்களும் உணர்வூக்கம் பெறுவதாக, சமூக ஊடகத்தில் அவர் கூறியுள்ளார். கோவாவின் விடுதலைக்காக சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளான வைத்யா, நானாஜி, ஜகன்நாத் ஜோஷி உள்ளிட்டவர்களுக்கு தலை வணங்குவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, கூறியுள்ளார். இவர்களின் தியாகம் காரணமாகவே, கோவா இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியதாகவும், அதற்கு முன்பாக, 1961ஆம் ஆண்டு வரை, இந்தியர்கள் கோவா செல்ல, தனி அனுமதி தேவைப்பட்டதை இன்றைய தலைமுறை அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றும், திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

---------------------------

*புதுச்சேரி-புத்தக கண்காட்சி (12)*

புதுச்சேரியில், எழுத்தாளர் புத்தக சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 29ஆம் ஆண்டு புத்தக கண்காட்சியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்து, கண்காட்சி அரங்குகளில் புத்தகங்களை பார்வையிட்டார். 10 நாள் நடைபெற உள்ள கண்காட்சியில், பல்வேறு பதிப்பாளர்கள், மற்றும், புத்தக விற்பனையாளர்கள், 60க்கும் மேற்பட்ட அரங்குகளில், 1 லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை விற்பனைக்கு வைத்துள்ளனர். கண்காட்சியில் வாங்கப்படும் புத்தகங்களுக்கு 10 சதவிகித தள்ளுபடி அறிவிக்கப் பட்டுள்ளது. பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கு, படிப்பு சம்பந்தமான நூல்களின் விலையில், 25 சதவிகித தள்ளுபடி வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு இக்கண்காட்சியில், 70 லட்சம் ரூபாய்க்கு புத்தகங்கள் விற்க்கப்பட்ட நிலையில், இவ்வாண்டு விற்பனை இலக்கு, 1 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*வானிலை (8)*

தமிழ்நாடு, மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், இன்று முதல் வரும் 24ஆம் தேதி வரை, வறண்ட வானிலையே நிலவும் என்றாலும், கிழக்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 25ஆம் தேதி ஓரிரு இடங்களில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, செனைனை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 23ஆம் தேதி வரை, குறைந்தபட்ச வெப்பநிலையில், பொதுவாக பெரிய மாற்றங்கள் இராது என்றாலும், வெப்பநிலை சற்று குறையலாம் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

----------------------------

*அமித் □ ா – துறைமுகம்* (10)

நாடு முழுவதும் துறைமுகங்களுக்கு, வலுவான,பாதுகாப்புக் கட்டமைப்பு ஒன்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார். இதற்கென துறைமுக பாதுகாப்புக் கழகம் என்ற பெயரில், தனி அமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து, அவர் இன்று புதுடெல்லியில் கூட்டம் ஒன்றை நடத்தினார். புதிதாக நிறைவேற்றப் பட்டுள்ள வணிகக் கப்பல் சட்டத்தின் 13ஆவது பிரிவின் கீழ், சட்டப்பூர்வ அமைப்பாக, துறைமுகப் பாதுகாப்புக் கழகம் உருவாக்கப்படும் என்றும், சிவில் விமானப் போக்குவரத்துத் துறைகான, பாதுகாப்பு கழகத்திற்கு இணையாக, புதிய அமைப்பு செயல்படும் என்றும், மத்திய உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

----------------------------

*விமானப் பயணிகள்* (17)

நாட்டில், பல இடங்களில் மூடுபனி காரணமாக, விமான சேவை பாதிக்கப் பட்டுள்ளதால், விமானப் பயணிகள், இதுகுறித்து தகவல்களை, விமான சேவை நிறுவனங்கள், விமான நிலையங்கள், மற்றும், அதிகாரப்பூர்வ இணைய தளங்கள் மூலமாக தெரிந்து கொண்டு, அதற்கேற்ப செயல்பட வேண்டும் என, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. விமானங்கள் ரத்து செய்யப்பட்டால், பயணக் கட்டணத்தை முழுமையாக திருப்பி அளிக்கவும், பயணத் தேதியை இலவசமாக மாற்றித் தரவும், விமான சேவை நிறுவனங்களுக்கு, அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. வானிலை நிலவரங்களை

அவ்வப்போது அறிந்து கொண்டு, அதற்கேற்ற முடிவுகளை மேற்கொள்ள ஏதுவாக, இந்திய வானிலை ஆராய்ச்சித் துறையுடன், தாங்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும், அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, மூடுபனி காரணமாக, நாட்டில் பல ரயில்களின் இயக்கமும் பாதிக்கப் பட்டுள்ளது. சுமார் 60 ரயில்கள், 5 மணி நேரம் வரை தாமதமாக இயக்கப் படுவதால், பயணிகள் ரயில் நிலையங்களுக்கு வருவதற்கு முன்பாக, நடப்பு நிலவரங்களை அறிந்து கொண்டு, செயல்பட வேண்டும் என்றும், ரயில்வே துறை அறிவுறுத்தி உள்ளது.

---------------------------

ஆஸ்திரேலியா துப்பாக்கி (7)

ஆஸ்திரேலியாவில் அண்மையில் நடைபெற்ற யூதர் திருவிழா ஒன்றில், தந்தையும்-மகனுமான இருவர் துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டதில், 15 பேர் பலியானதை தொடர்ந்து, அந்நாட்டில் தற்போதுள்ள துப்பாக்கிகளை உரிமையாளர்களிடம் இருந்து, விலை கொடுத்து வாங்கி, புழக்கத்தில் இருந்து அகற்ற, ஆஸ்திரேலிய அரசு, திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இதற்கான செலவை, ஆஸ்திரேலியாவின் மத்திய-மாகாண அரசுகள் கூட்டாக ஏற்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

--------------------------

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் இன்று முடிவடைந்து, இரு அவைகளும், மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப் பட்டன.

அரசுப் பணிகளுக்கு ஆள் எடுப்பதில், நேர்மை-நியாயத்திற்கு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று மாலை புதுடெல்லியில், பாரம்பரிய மருத்துவம் குறித்த, 2-ஆவது உலக உச்சி மாநாட்டின் நிறைவு விழாவில் கலந்து கொண்டார்.

புதுச்சேரியில், எழுத்தாளர் புத்தகச் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 29ஆம் ஆண்டு புத்தகக் கண்காட்சியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.